திராவிடநாடு

18-6-61 | வார வெளியீடு | விலை 16 காசு

# எழிலே உனை மறவேன்

—[அ. செயராமன்]—

கலையே! செழு மணியே! சுவைக்
கனியே! பொழில் தனிலே
சிலையே என இருந்தே மதி
சிதைத்தே எனை அடைந்தாய்.

தளிரே! மது மலரே! உனைத்
தமிழே என அணைத்தேன்;
களிப்பே மிகு பெறவே இதழ்க்
கடையில் மது குடித்தேன்.

மனமே இணைந் திடவே தமிழ்
மணமே புரிந் திருந்தோம்.
இனத்தை மறந் திருந்தேன் குறள்
இயம்பும்வழி மறந்தேன்.

'விழியே இது தகுமா?' என
விழித்தாய்; மதி கொடுத்தாய்;
'எழிலே இனி மறவேன்' என
இணைந்தே பதில் உரைத்தேன்.

"பணமே குறி எனவே சிலர்
பகரும் வழி நடப்போர்
பிணமே" என மொழிந்தாய்; எனைப்
பிரித்தாய் பிணி மிகவே.

"உயிரே திரா விடமே பெற
உழைப்பேன்;" தினம் உரிமைப்
பயிரே வளர் கவிகள் பல
பகர்வேன் உனை மறவேன்.

# சிங்காரம்

★ கனகு ★

பிற்பகல் மூன்றுமணியிலிருந்து சிங்காரம் தன் குதிரை வண்டியோடு காத்துக்கொண்டுகிடந்தான். அந்தச் சந்தடிமிகுந்த நாற்சந்தியில் நெருக்கியடித்துக்கொண்டு எத்தனையோ பேர் வருகிறார்கள். எத்தனையோ பேர் போகிறார்கள். ஒருவர் கூடச் சிங்காரத்தின் குதிரைவண்டிப் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை. சொல்லிவைத்தாற்போல் பயணம் போகும் அத்தனைபேரும் பஸ்ஸை நோக்கியோ, டாக்சியை நோக்கியோதான் போய்க்கொண்டிருந்தார்கள். அப்படியே தப்பித் தவறிக் குதிரை வண்டியில் போகவேண்டுவோர்கூட, "சார், வாங்க சார்! வாங்க, வாங்க, வாங்க!" என்று கெஞ்சிக்கெஞ்சிக் கத்திக்கொண்டிருக்கும் சிங்காரத்தின் பக்கம், அவன் வண்டியின் பக்கம் ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

சிங்காரத்திற்கு அன்று சோதனை நாள். அந்த நாற்சந்தியைச் சுற்றிச் சுற்றி, அங்கே நின்று, நின்று அவன் கால்கள் கடுத்தன. 'குதிரைவண்டி, குதிரைவண்டி' என்று கத்திக்கத்தி அவன் தொண்டை வறண்டுவிட்டது. அவன் சோர்ந்து போய்விட்டான். வண்டியருகில் வந்து, அந்த வண்டியைப் பிடித்துக்கொண்டு திகைத்து நின்றுவிட்டான் பாவம், அவன் குதிரை! காலையில் அவன் பழைய கஞ்சி குடித்தபோது அதுவும் இரண்டு புல்லை மென்றதோடு கிடக்கின்றது. அதற்குப் பிறகு அது புல்லையும் காணவில்லை; கொள்ளையும் நினைக்கவில்லை. சிங்காரத்தோடு அதுவும் பட்டினியாகக் கிடக்கின்றது — கொலை பட்டினி. சிங்காரத்திற்கு ஆசைதான், தன் குதிரைக்குக் கொள்ளும், புல்லும் வாங்கிப் போடவேண்டுமென்று. கொள்ளும், புல்லும் கடனுக்கு யார் கொடுப்பார்கள்—சிங்காரத்திற்கு?

"ஏ, குதிரை வண்டி!"

சிங்காரம், குரல் வந்த பக்கம் திரும்பினான். நாலைந்து பேர் ஒரு கும்பலாக நின்றார்கள். அந்தக் கும்பலே மிடுக்கான உடையோடு தோற்றத்தோடு காட்சியளித்தது. குதிரைவண்டியில் சவாரி செய்கிறவர்கள்போல் அவர்கள் தென்படவில்லை. 'அழைத்தது அவர்கள்தாமா?' ஐயப்பாட்டோடு நோக்கினான் சிங்காரம். 'இருக்காது! அவர்களாக இருக்காது!' சிங்காரம் தன் பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டான்.

"அடே, உன்னைத்தானப்பா!"

கும்பலிலிருந்து ஒருவன் சிங்காரத்திடம் வந்தான்.

"நீங்களா கூப்பிட்டீங்க? என்னையா கூப்பிட்டீங்க?"

சிங்காரத்திற்கு வியப்பு.

"ஆமாம், திருப்பு வண்டியை, புறப்படலாம்!"

"எத்தனை பேருங்க? எங்கே போகணுமுங்க?"

"இரண்டே பேர்தான். அதிக தூரம் இல்லை. புறப்படு! சீக்கிரம் போகவேண்டும்!"

சொல்லிக்கொண்டே வந்தவன், வண்டியில் குதித்தேறி அமர்ந்தான். அவனைத் தொடர்ந்து வந்த மற்றொருவனும், ஏறி உட்கார்ந்துகொண்டான். அவர்களில், ஒருவன் கையில்கனமான பையொன்று இருந்தது. பைக்குள் என்னவோ! அதைப்பற்றிச் சிங்காரத்திற்கு என்ன கவலை?

"உம், உம். ஓட்டு, ஓட்டு." அவர்கள் துரிதப்படுத்தினார்கள்.

'ஆமாம், கூலி பேசிக்கொள்ளவில்லையே! இந்தமாதிரி ஆட்களிடம் முன்கூட்டியே பேசிக்கொண்டால் தானே நல்லது. இல்லாவிட்டால் இறங்குமிடத்திலே போய்த் தகராறு பண்ணுவார்களே!'

"என்ன யோசிக்கிறே? உம் உம், விடு சீக்கிரம்!"

"கூலி"

உரக்கச் சொன்னான் சிங்காரம்.

"அட, என்னப்பா! கூலியா நாங்கள் தரமாட்டோம்! நீ கேட்கிற கூலியைத் தருகிறோம். வேண்டுமானால் முன்கூட்டியே வாங்கிக்கொள்!"

ஐந்து ரூபாய்த்தாள் ஒன்றை எடுத்துச் சிங்காரத்தின் முகத்துக்கு நேரே நீட்டினான் ஒருவன்.

சிங்காரத்திற்கு ஐயம் அகன்றது.

"சரி, சரி, இறங்குமிடத்திலேயே கொடுங்கள். சில்லறையாகக் கொடுங்கள்."

வண்டியில் தாவி ஏறினான் சிங்காரம். குதிரையைத் தட்டிவிட்டான். வண்டி கிளம்பியது. எங்கே போக வேண்டும் என்று கேட்கவில்லை சிங்காரம். மறந்துவிட்டான் கேட்க. வந்தவர்கள் மறப்பார்களா!

"நேரே போய்விடாதே! அந்த முனையிலிருந்து வலது பக்கமாகத் திரும்பிவிடு. அப்புறம் விடு வண்டியை — நேரே கண்ணை மூடிக்கொண்டு."

"நீங்க சொல்றது காட்டுப்பாதை யாச்சுங்களே! அந்த வழியா நான் அதிகம் போனதுகூடக் கிடையாது. இருட்டா வேறே போயிடும்" சிங்காரம் தயங்கினான். வேகமாக ஓடிக்கொண்டிருந்த குதிரையை இழுத்துப்பிடித்தான்.

"அட, என்னப்பா இப்படிப் பயப்படறே சின்னக் குழந்தை மாதிரி! இப்போ நேரம் என்ன, ஆறுமணி தானே? ஏழுக்கெல்லாம் நீ திரும்பி விடலாமே!"

"காட்டுப்பாதை பாருங்க. அதனாலேதான் யோசிக்கறேன்"

"அட என்னப்பா காடு! ரோடு இருக்குதேப்பா, பக்கா ரோடு. ரோட்டுமேலேதானே நீ போகப் போறே! — நியாயமாப் பார்த்தா நாங்க பயப்படவேணும். ஒரு குதிரை வண்டிக்காரன், நீயே இப்படிப் பயப்படலாமா? விடப்பா வண்டியை! போகட்டும் சீக்கிரம்!"

"முதலிலே கூலியைக் குடுத்திடுங்க. அப்போ கொஞ்சம் தெம்பா போவாரு." என்றான் மற்றவன்.

"ஆமாம்!" என்று கூறிக்கொண்டு, முதலில் எடுத்து நீட்டிய அந்த ஐந்து ரூபாய் நோட்டையே அவன் முகத்துக்கு நேரே காட்டி, அவனிடம் நீட்டினான் முதலவன்.

"என் கிட்டே சில்லறை இல்லீங்களே!"

"அட, சில்லறை யாரப்பா கேட்டது? வைத்துக்கொள் இந்த ஐந்து ரூபாயையும்!"

மகிழ்ச்சியா, தயக்கமா, திகைப்பா!—எது என்று தோன்றாத ஒன்று சிங்காரத்தைப் பிடித்துக்கொண்டது. ஆமாம், இருக்காதா? காலையிலிருந்து ஒரு புதுக்காசுகூடக் கிடைகாமல் இருந்துவிட்டு, இப்போது திடீரென்று இரண்டு கல் சவாரிக்கு ஐந்து ரூபாய் நோட்டாகக் கிடைப்பதென்றால்!

'டக்டக் டகடக் டக்டக் டகடக்' குதிரை வண்டி ஓடிக்கொண்டிருந்தது. ஆள் நடமாட்டம் அதிகமில்லாத அந்தக் காட்டுவழியில் குதிரை வண்டி விரைந்தோடும் ஒலியைத் தவிர, வேறு செயற்கை ஒலியே கிடையாது. வண்டிக்குள்ளிருந்த ஆட்கள் இருவரும் அதிகம் பேசிக்கொள்ளவில்லை. அப்போதைக்கப்போது சிங்காரம் குதிரையைஅதட்டி முடுக்கிவிடும் குரல், "எய், எய்" என்ற ஒலி குதிரை வண்டியின் டக்டக் சத்தத்தோடு கலந்து, இழைந்து சிலையோடிக்கொண்டிருந்தது.

சிங்காரத்திற்கு ஐந்து ரூபாய் கிடைத்ததால் பெருமகிழ்ச்சி.அவன் குதிரையும் அந்த மகிழ்ச்சியிற் கலந்து திளைத்துவிட்டதுபோலும்—

(4-ம் பக்கம் பார்க்க)

# வேற்றுமையில் ஒற்றுமை

மலர் 19] ஆண்டு சந்தா ரூ. 8 (18—6—61) தனிப்பிரதி 16 காசு [இதழ் 4

ஒரு பொருளின்மீது வெறியோ வெறுப்போ ஏற்படுவது அவரவர்கள் பார்க்கும் கோணத்தைப்பற்றியது ஆகும். ஒருவனுக்கு நல்லதாக இருப்பது வேறொருவனுக்குக் கெட்டதாக இருக்கலாம். நாம் வேண்டும் என்பதை இன்னொருவர் வேண்டாம் எனலாம். இருசாரரும் பார்க்கும் கோணமும், கொள்ளும் கொள்கைகளுமே நல்லது கெட்டது என்ற முடிவுகளை ஏற்படுத்துகின்றன. ஆனால் பொருளின் தன்மை நல்லது என்றாலும் சரி, கெட்டது என்றாலும் சரி ஒரே நிலையில்தான் இருக்கும். அதை அழிக்க இயலாது.

நல்லது கெட்டது என்ற இருமுனைகளில் நிற்போரே சில நேரங்களில் சில பொருள்களில் ஒத்துப்போவது ஒன்றிவிடுவது உண்டு. கத்தரிக்காய் உடம்புக்கு சூடு என்பதிலே கருத்து வேறுபாடு கொண்டவர்கள்கூட நெருப்பு சுடும் என்ற ஒரு பொருளில் ஒன்றுபடுவர்; காற்றுத் தேவை என்பதை மறுக்கமாட்டார்கள்; நீரின் இன்றியமையாமையை உணருவர்.

நாட்டுப் பிரச்சினைகளிலும் இதேநிலை அவ்வப்போது ஏற்படுவது உண்டு. ஒன்றுக்கொன்று முரணான கோட்பாடுகளைக் கொண்டுள்ள இயக்கங்கள், சில கோரிக்கைகளின்மீது ஒன்றிச் செயல்படுவதைக் காணுகின்றோம்; காணவேண்டும், அதுவே அரசியல் நன்னெறி என்பதாகும். தனித்தனியே வலிவு சேர்த்து வாழ்வைப் பெருக்கிக்கொள்ளும் கட்சிகள் தாம் வாழும் நாட்டுக்குப் பொதுவான பிரச்சினைகள் எழும்போது தமக்குள்ளே இருக்கும் வேற்றுமைகளை விட்டொழித்து இணைந்து நிற்பதே முறை. இப்படிச் சில நேரங்களில் வாய்ப்பது உண்டு.

தமிழ்மொழி தழைக்கவேண்டும் என்பதிலே ஒற்றுமைதான்; தமிழர் நலம்பெறவேண்டாம் என்று சொல்வார் எவரும் இல்லை; தமிழ்நாடு என்ற பெயர் தேவைதானா என்று கேட்போர் உண்மையில் இருக்கக்கூடாது. தமிழகத்தைப் பொருத்தவரை இது நிலை.

'தமிழ்மொழி வளர்க! வாழ்க!' என்று சொல்லிவிட்டால் மட்டும் அது வளர்ந்துவிடும், வாழ்ந்துவிடும் என்று எண்ணுவது தவறு. வாழவைக்கவேண்டிய முயற்சிகளிலும் நாம் ஈடுபடுதல்வேண்டும். எப்படி வாழவைப்பது? இரண்டு வழிகள் உள. ஒன்று புலவர்களின் பொற்கரங்களில் உள்ளது. இன்னொன்று பொதுமக்களின் பொன்னான கருத்தொற்றுமையில் இருக்கிறது. வழக்குத்தான் — பழக்கம்தான் — ஒரு மொழியை வாழவைக்கக்கூடியது. எத்துணை உயர்ந்த மொழி, தனிமொழி, செம்மொழி எனினும் வழக்கு இழக்குமேல் வாழ்வையும் அது இழந்துவிடும். வழக்கு இழக்காமலிருக்க என்ன வழி? யாரிடம் அந்தப் பொறுப்பு உள்ளது?

மக்களோடு தொடர்புடைய எதிலும் அரசினரின் ஈடுபாடு பழக்கத்தையும் உண்டாக்கித் தருவதாகும். அந்த வகையில் சில நல்ல முயற்சிகளுக்கு அரசு ஆதரவு தரவேண்டும் என்று நாம் எடுத்துக்காட்டியது உண்டு; வற்புறுத்தியது உண்டு.

'ஸ்ரீ', 'ஸ்ரீமதி'—இச்சொற்களை விடுத்துத் தமிழ்ச் சொற்களான 'திரு' 'திருமதி' போன்றவற்றைப் பயன்படுத்தவேண்டும் என்று சொன்னோம். மாநகராட்சி மன்றம், நாட்டின் பல பகுதிகளில் இருக்கும் ஊராட்சி மன்றங்கள் அத்தனையும் தீர்மானங்களை நிறைவேற்றின. அமைச்சர் பக்தவத்சலனார் கேலி பேசினார். இதிலே என்ன மோகமோ என்றார். போலீஸ்காரர் காவலர் ஆவதை விரும்பாதவர் அல்லவா! ஸ்ரீ. திரு ஆனால் ஸ்ரீரங்கத்தைத் திருவரங்கம் ஆக்கவேண்டும் என்று கேட்பார்கள் போலிருக்கிறது என்றார். இவர்களுக்கு ஏன் இத்தனை வெறி என்று தனக்கிருக்கும் வெறுப்பை வெளிப்படுத்தினார்.

இதோ ஒருவர், காங்கிரஸ்காரர்தான், என்றாலும் ஸ்ரீரங்கம், திருவரங்கம் ஆகவேண்டும் என்கிறார். பக்தவத்சலத்திற்குப் பதில் சொல்கிறார்.

யார் அவர்? டாக்டர் சுப்பராயன். இந்தித்திணிப்புக் கூடாது என்று கண்டனக்குறிப்பு எழுதியவர், தமிழ் நாட்டுக் கவிஞரின், உருவம் அஞ்சல்தலையில் இடம் பெறச் செய்தவர், என்ற புகழோடு தமிழ்ச் சொற்களுக்கு வாழ்வளிக்க முயன்றவர் என்ற பெயரையும் பெறுகிறார்.

இப்போது பக்தவத்சலனார் என்ன சொல்வாரோ, தெரியவில்லை! நாமாக இருந்தால் நாலுசொற்களை எடுத்து வீசி வென்றுவிட்டேன், வீழ்த்திவிட்டேன் என்று புகழாரம் பூணலாம். ஆனால் டாக்டர் சுப்பராயன் அல்லவா இப்போது அவர் எதிரில் நிற்கிறார். என்ன செய்வாரோ!

நியாயமாகச் செய்யக்கூடியது பெயர் மாற்றம் தான். டாக்டர் சுப்பராயன் சொல்லிவிட்டாரே என்பதற்காக அல்ல, அதிலே உண்மை இருக்கிறது என்பதால். தமிழ் இலக்கியங்களிலும் சரி, வைணவமுறைகளிலும் சரி திருவரங்கம் என்ற சொல்லே ஆட்சி பெற்றுள்ளது. திரு தீண்டப்படாத சொல் அல்ல; 'திவ்ய'மானதுதான். எனவே பொறுப்பில்உள்ள மாநில ஆட்சியாளர்கள் இந்த நல்ல கருத்தையும் காலத்தையும் பயன்படுத்திக்கொண்டு தமிழ், நல்ல தமிழ் வழங்க ஆவன செய்யவேண்டுகிறோம். 'நீங்கள் சொல்லி நாங்கள் செய்யவில்லை, எங்கள் சுப்பராயன் சொன்னார் செய்தோம்' என்றுவது சொல்லிக்கொள்ளட்டும். நம்மைப்போல—நாளெல்லாம், காலமெல்லாம் தமிழுக்கு உயர்வுதேடப் பாடுபடும் எல்லாருக்குமே இது மகிழ்ச்சியைத் தரும். வேற்றுமையில் ஒற்றுமை விரும்பத்தகாத ஒன்றல்ல.

○

2-ம் பக்கத் தொடர்ச்சி

பசியை மறந்து, தளர்ச்சியை மறந்து அது விரைந்து ஓடிக்கொண்டிருந்தது. சிங்காரம் மறந்துவிட்டான் போகவேண்டிய தூரம் இரண்டுகல் தொலைவுதான் என்று பயணிகள் சொன்னதை.

வண்டி ஓடிக்கொண்டிருந்தது. இரண்டுகல் தொலைவைத்தாண்டி, மேலும் இரண்டுகல் ஓடிக்கொண்டிருந்தது. வண்டிக்குள் இருந்தவர்கள் மூச்சுவிடவில்லை. சிங்காரத்தின் மெய்ம்மறந்த செயல் அவர்கள் வேலையை எளிதாக்கிவிட்டது. 'சரியாக இரண்டுகல் தொலைவு போனதும் வண்டியை நிறுத்திக்கொள்வான் சிங்காரம். அப்போது அவனிடம், நயமாகச் சொல்லிப்பார்க்கலாம், மேலும் சற்றுப் போகவேண்டும் என்று. அவன் இசைந்தால் போகட்டும். செயல் எளிதில் நிறைவேறட்டும். இசையவில்லை என்றால் அச்சுறுத்தலாம்; அதற்கும் சிங்காரம் மசியவில்லை என்றால், இருக்கவே இருக்கின்றது 'வன்முறை' என்ற திட்டத்தோடுதான் வண்டியில்வந்து ஏறி அமர்ந்தார்கள் அந்த ஆட்கள் இருவரும். சிங்காரம் அவர்களை ஏமாற்றிவிட்டான். அவர்கள் எதிர்பார்த்தபடி நடந்துகொள்ளாமல். அவர்களும் மௌனமானார்கள்–தங்கள் குறிக்கோள் இடையூறு இல்லாமல்தானே நிகழ்ந்துகொண்டு போவதைக்கண்டு.

பயணிகள் கொடுத்த ஐந்து ரூபாயைக்கொண்டு வீடுதிரும்பியதும் என்னென்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றிச் சிங்காரம் திட்டம் போட்டான்; திட்டம் போட்டுக்கொண்டேயிருந்தான். 'முதலில் குதிரைக்குக் கொள்ளும், புல்லும், வாங்கிவிடவேண்டும் — இரண்டு ரூபாய்க்கு. பிறகு வீட்டுக்காரியிடம் இரண்டு ரூபாயைக் கொடுத்துவிடவேண்டும். அப்புறம் ஒரு ரூபாய் மிஞ்சுகிறதா? அந்த ஒரு ரூபாயையும் பழைய கடன் கொடுத்தவன்— பெட்டிக்கடை நல்லமுத்துவுக்குக் கொடுத்துவிடவேண்டும். பிறகு ஒன்றுமில்லையே மிச்சமாக? ஆமாம், அந்த டீக்கடைக்காரனுக்குக் கொடுக்கவேண்டிய நாலணாவுக்கு என்ன செய்வது? வரும்போதுகூட அவன் கூப்பிட்டுக் கேட்டானே! இன்றைக்கு அந்த நாலணாவையும் கொடுக்காவிட்டால், நாளைக்கு டீ தரமாட்டானே! சரி, ஒன்று செய்யலாம்' திரும்பவும் புதுத்திட்டம் போட்டான்.

முதலில் வீட்டில் ஒன்றரை ரூபாயைக் கொடுத்துவிடலாம். பிறகு குதிரைக்குக் கொள்ளும், புல்லும் வாங்க ஒரு ஒன்றேமுக்கால் ரூபாய்; பழைய கடனுக்காக ஒரு ஒரு ரூபாய்; டீக்கடைக்காரனுக்கு நாலணா. எல்லாம் போக மிச்சம் எட்டணாவா!— அ...அதுதான் சரி, எட்டணாவைக் கையில் வைத்துக்கொள்ளலாம். நாளைக்கும், அடுத்த நாளும் காசை விட்டெறிந்து டீ குடிக்கலாம்;— கடன் இல்லாமல். அதுதான்சரி.— ஆமாம், காலையில் அந்த மளிகைக் கடைக்காரனிடம் அரிசி வாங்கினோமே முக்கால் ரூபாய்க்கு! அது என்னாவது? போகும்போதே அவன் வழியை மறித்துக்கொண்டு நிற்பானே, முக்கால் ரூபாயைக் கொடு என்று. அதற்கு என்ன செய்வது? ச்சே! ச்சே! திட்டம் ஒன்றுமே சரி வரவில்லையே! சரி......' பழையபடி முதலிலிருந்து திட்டம்போடத் தொடங்கினான்—புதுத்திட்டம்.

இப்படி அவன் தனக்குள் திட்டம் போட்டுப் போட்டு, அதை அழித்து, அழித்து மாற்றிக்கொண்டு போய்க்கொண்டிருந்த போக்கில் தன்னை மறந்துவிட்டான். தன்னை மறந்த அந்த நிலையில் அவனுக்குத் தொலைவு தெரியவில்லை. ஓட்டம் தெரியவில்லை. விரைவு தெரியவில்லை. போக்கும் தெரியவில்லை; வரவும் தெரியவில்லை. இரவோ, பகலோ, மாலையோ, காலையோ எதுவுமே தெரியவில்லை. வண்டிபாட்டிற்கு ஓடிக்கொண்டிருந்தது. அவன் பாட்டிற்கு 'ஏய், ஏய்' என்று அப்போதைக்கப்போது கூவிக்கொண்டிருந்தான்—பழக்கம் காரணமாக.

“நிறுத்து, நிறுந்து, நிறுத்து!”

திடீரென்று வண்டிக்குள்ளிருந்த இருவரும் பேரொலி கிளப்பினார்கள். அவர்கள் போட்ட கூச்சலில், குதிரை வெருண்டு, மருண்டு அதிர்ந்துபோய் நின்றுவிட்டது.

அப்போதுதான் சிங்காரம் பரக்கப் பரக்கச் சுற்றுமுற்றும் பார்த்தான்—ஆழ்ந்த துயிலினின்று மீண்டவன்போல்; தெளிந்தவன்போல். அவன் கனவு கலைந்து, கழன்றுகொண்டு ஓடிற்று. தன்னினைவுக்கு வந்தான் அவன். எங்கணும் இருள் கப்பிக்கொண்டு கிடந்தது. அவன் வந்துவிட்ட இடம் எது என்று அவனுக்குத் தெரியவில்லை. கடந்து வந்துள்ள தூரம் எவ்வளவு என்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. அவன் வந்துகொண்டிருக்கின்றானா, போய்க்கொண்டிருக்கின்றானா என்பதையே அவனால் எளிதில் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

பின்னால் திரும்பிப் பார்த்தான் சிங்காரம். பளிச்சென்று அவன் கண்களில் ஒளிவந்து தாக்கிற்று. பின்புறமிருந்து ஜீப் ஒன்று விரைந்து நெருங்கிக்கொண்டு வந்தது.

திடீரென்று ஒளி வெள்ளம் பாயவே அவன் திகைத்துத் தடுமாறி, மயங்கிக் கலங்கினான். அந்தக் கலக்கம் வண்டிக்குள் இருந்த இருவரும் வண்டியிலிருந்து குதித்து வெளியேறி ஓடுவதை அவன் காணமுடியாமல் திரைபோட்டு மறைத்தது.

அந்த ஜீப், சிங்காரத்தின் வண்டியை மிக நெருங்கி வந்து நின்றது. அதன் விளக்கொளி சிங்காரத்தின் மீது பட்டுக்கொண்டேயிருந்தது.

நாலைந்துபேர் திமு திமுவென்று ஜீப்பிலிருந்து இறங்கினார்கள். திடுதிடுவென்று ஓடினார்கள்.

“பிடி, பிடி, ஓடு ஓடு, துரத்து, துரத்து, — அதோ ஓடுகிறார்கள்; அதோ, அதோ” என்று ஜீப்பில் வந்த எல்லாருடைய குரல்களும் ஒலித்தன. அந்த ஒலி காட்டையே கிடுகிடுக்க வைத்தது.

துரத்திக்கொண்டு ஓடியவர்கள் போக எஞ்சி நின்ற இருவர் சிங்காரத்தின் வண்டியை வந்து வளைத்துக்கொண்டார்கள். சிங்காரம் அப்படியே அமர்ந்திருந்தான். நிலைகுலைந்து, மனம் அதிர்ந்து அமர்ந்திருந்தான். அவன் வண்டி ஆடாமல் அசையாமல் நின்றுகொண்டிருந்தது. அவன் குதிரை மரத்தால் செய்த பொம்மைக் குதிரைபோல் உயிர்த் துடிப்பை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அசைவு இன்றி நிறுத்தியது நிறுத்தியபடி நிலைத்தது, நிலைத்தபடி நின்றுகொண்டிருந்தது.

“ஓடு, ஓடு, பிடி பிடி, துரத்து, துரத்து, அதோ!” என்று ஒலிகள் தொடர்ந்து கேட்டுக்கொண்டேயிருந்தன. ஒளி மிகுந்த பாட்டரி விளக்குகளின் வெளிச்சம் அந்தக் காட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பாய்ந்துகொண்டிருந்தது. அந்த ஒளியும், ஒலியும் காட்டை அலைமோதச் செய்தன. கூடுகளிலும், பொந்துகளிலும் அடங்கி முடங்கிக் கிடந்த பறவை இனங்கள் கிறீச்சிட்டு, வானிற் பறந்து அலமந்தன. மண்டிக் கிடக்கும் புதர்களுள் ஒண்டி, ஒடுங்கிக் கிடக்கும் சிறு விலங்குகள் திகைத்துத் தடுமாறி திக்குக்கொன்றாக ஓடின.

( 16-ம் பக்கம் பார்க்க )

காஞ்சீபுரம்

18—6—'61.

# தம்பி !

"ஒரு பெண் கற்போடு இருப்பது இலாபமா? கற்பிழந்தவளாக இருந்தால் இலாபமா? என்று யாரும் கேட்கமாட்டார்கள். ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலையில்லையோ அதுபோல ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கும் விலையில்லை."

அதுசரி, அண்ணா! நாடு விடுதலை பெறவேண்டும் என்பதனை அழுத்தந்திருத்த மாகக் கூறவேண்டியதுதான்; மரமண்டைகளுக்கும் புரியும்படி; ஆனால் விலகியோர் கூறுகிறபடி, எதற்காக அண்ணா! பால் உணர்ச்சி உள்ள பேச்சுப் பேசுகிருய்?—என்றுதானே, தம்பி! கேட்கிருய். இது, என் பேச்சு அல்ல! விலகியோரில் ஒருவரின் பேச்சு! சட்டசபை உறுப்பினர்! அமைதியாகப் பேசுபவர். அவருக்கே, மனம் குமுறி, புதுவை மாநாட்டிலே, பேசினார் இதுபோல!

எடுத்துக்காட்டுகள், உவமைகள், கவிதைகள், கதைகள் ஆகிய வைகளைக்கொண்டு, தேவையான, அரசியல், சமுதாயக் கருத்துக்களை, எளிய முறையிலே அனைவரும் புரிந்துகொள்ளச்செய்யும் முறை—என் கண்டுபிடிப்பு அல்ல! நீண்ட பழம்காலந்தொட்டு, அறிவாளர் மெத்த அருமையாகக் கையாண்ட வழி. அதே முறைப்படித்தான், நம்மைவிட்டு விலகிய சட்டசபை உ பினர் எம். பி. சுப்ரமணியம் அவர்கள், கழக மாநாட்டிலே, நாட்டு விடுதலையின் அ படைத் தன்மையை விளக்க, இந்த உவமை காட்டிப் பேசினார் — புதுவையில். க் கறிஞர். பேச்சு, வெறும் பேச்சுக்காக அல்ல. வழக்கை விளக்க வாதம் ே வ அல்லவா—அம்முறையில்,

"நாடு புறக்கணிக்கப்படுவது தவிர்க்கப்பட்டால், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலே போதிய பணம் திராவிடத்திற்கு ஒதுக்கப்பட்டால், திராவிட நாடு கேட்கமாட்டீர்களா? என்பார்கள்.

ஒரு நாடு விடுதலைபெற்ற நாடாக இருப்பதும் ஒரு மனிதன் சுதந்தர மனிதனாக வாழ்வதும், அதனால் ஏற்படக்கூடிய இலாப நட்டக் கணக்கல்ல— நாம் பார்க்கவேண்டியது எல்லா வசதிகளையும் கொடுத்து வாழ்நாள் முழுவதும் சிறைக் கைதியாக இருப்பாயா? என்று ஒருவனைக் கேட்டால், கூலிக்காரனாக இருந்தாலும் சுதந்திர மனிதனாகவே இருக்க விரும்புவான் என்பது மறுக்கமுடியாததாகும்."

என்று விளக்கம் அளித்தார்.

★ புதுப் பா

இந்த விளக்கம் போதும்போலிருக்கிறதே! மேலும் இதிலே பால் உணர்ச்சி இல்லை. இதுபோல் பேசினல் போதுமே! என்று, தம்பி! உனக்குத் தோன்றுகிறது. ஆனல் அவருக்கு அப்படித் தோன்றவில்லை; ஆகவே, அவர் தமது வாதத்தைத் தொடர்ந்து பேசுகிருர்,

> "அதைப்போலத்தான் ஒரு நாடு அடிமையாக இருப்பதால் இலாபமா? சுதந்தர நாடாக இருப்பதால் இலாபமா என்பதல்ல நாம் கவனிக்கவேண்டியது—ஒரு பெண் கற்போடு இருப்பது இலாபமா? கற்பிழந்தவளாக இருந்தால் இலாபமா? என்று யாரும் கேட்கமாட்டார்கள். ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலையில்லையோ அதுபோல ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கும் விலையில்லை.''

நம்மோடு இருந்தாலாவது இத்தகைய விளக்க உரைகளை நாம் அடிக்கடி கேட்கலாம்—ஆனல் இல்லை —என்ன செய்வது—எப்படி எப்படிப் பேசினர்—பேசக்கூடியவர் — என்பதை எண்ணி மகிழ, அவருடைய உரையிலே சில பகுதிகளைத் தந்திருக்கிறேன்.

•

"'இருண்ட கண்டம்' என்று சொல்லப்படும் ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் இதுவரை ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் காலனிகளாக வைக்கப்பட்டிருந்த நாடுகள், இழைக்கப்பட்ட கொடுமைகளை வாய் திறந்து ஏனென்று கேட்காமல், அடிமைகளாய் வாழ்ந்த மக்கள், 'மனிதர்களாய்ப் பிறந்தோம்; அடிமைகளாய் வாழ்ந்தோம்; கொடுமைகளைச்சுமந்தோம்; இனியும் சகியோம்; வாழ்ந்தால் விடுதலை பெற்ற மக்களாய் வாழ்வோம்; அல்லது விடுதலைப்போரிலே மாள்வோம்; இனி வீணில் காலம் கடத்தமாட்டோம்' என்று ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் விடுதலைப்போரிலே தங்களைத் தியாகம் செய்யும் நிலையினைப் பார்க்கிறேம்.

கொடுக்கவேண்டிய பலிகளைக் கொடுத்து, செய்ய வேண்டிய தியாகங்களைச் செய்து விடுதலை பெற்ற மொராக்கோ, டுனீஷியா, கணு, சைப்ரஸ் நாடுகளைக் காண்கிறேம். வெற்றியின் அருகிலே உயிரைப் பணயம் வைத்துப் போராடும் அல்ஜீரியா, நயசாலாந்து நாடுகளையும் காண்கிறேம்.

இங்கே — 'திராவிடம் விடுதலை அடையவேண்டும்' என்று நாம் சொல்கிறேம். 'இந்தியா ஒன்று' என்பது, என்றும் இருந்ததில்லை! இந்திய உபகண்டத்தின் மீது படையெடுத்தவர்கள் எத்தனையோ பேர் ஆனல், எவரும் திராவிடத்தில் நுழைந்ததில்லை. பேரரசர்கள் என்று புகழ்பெற்றோர் இந்திய உபகண்டத்தில் ஏராளம்; ஆனல் எவரும் திராவிடத்தைத் தன்னுட்சியின்கீழ் கொண்டு ஆண்டதில்லை.

'இந்தியா ஒன்று' என்று சந்திரகுப்தன் காலத்தில் இல்லை! சமுத்திரகுப்தன் காலத்தில் இல்லை! அசோகன் காலத்தில் இல்லை! ஹர்ஷன் காலத்தில் இல்லை! கனிஷ்கன் காலத்தில் இல்லை! அக்பர் காலத்தில் இல்லை! ஔரங்கசீப் காலத்தில் இல்லை! ஆனல், அலகாபாத் பண்டிதர் காலத்தில் மட்டும் எப்படி இந்தியா ஒன்ருகும்?

அந்நியன் — வெள்ளையனும், பிரெஞ்சுக்காரனும் ஆண்ட காலத்தில், தன் நிர்வாக வசதிக்காகத் துப்பாக்கி முனையில், சர்க்கஸ் கம்பெனியில் ஆட்டையும் சிங்கத்தையும் ஒருசேர வைப்பதுபோல் — இந்தியாவை 'ஏக இந்தியா'வாக வைத்திருந்தான். அதனலேயே நாம், எப்படி வடவரோடு ஒன்ருக முடியும்?

மொழியால், கலையால், பண்பாட்டால், வரலாற்ருல் பழக்க வழக்கங்களால், பூகோள ரீதியாகத் திராவிடர் வேறு—வடவர் வேறு; அப்படியிருக்க, நாம் அனைவரும் ஒன்று என்று எப்படிச் சொல்லமுடியும்?

இந்து மதத்தைத் தழுவியவர்கள் இந்தியா முழுமையும் உள்ளவர்கள்; ஆகவே, இந்தியா ஒன்ருக இருக்க வேண்டும்—என்ருல், இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்கள் எல்லோரையும் ஓர் அரசின்கீழ் கொண்டுவர இயலுமா? கிருத்துவ மதத்தைத் தழுவியிருக்கின்ற காரணத்தினலேயே அமெரிக்காவும், இங்கிலாந்தும், பிரான்சும், ஜெர்மனியும், ஓர் ஆட்சியின்கீழ் இருப்பது சாத்தியமாகுமா? அதைப்போலத்தான், திராவிடமும் இந்தியாவோடு ஒன்ருக இருக்க இயலாது.

இரண்டு கைதிகளை, வசதிக்காகப் போலீசுக்காரன் ஒரு கைதியின் வலது கையுடன் மற்றவனின் இடது கையைச் சேர்த்து விலங்கிட்டு, சிறைக்கு அழைத்துச் சென்று ஓர் அறையில் பூட்டிவைப்பதாக வைத்துக் கொள்வோம். விடுதலை அடைந்ததும் அந்தக் கைதிகள் வீடு திரும்புகையில், அவரவர்கள் வீட்டுக்கு அவரவர்கள் போவார்கள். இதுவரை ஒன்ருகவே சிறையில் வைக்கப்பட்டிருந்தோம்; ஆதலால் இனியும் ஒன்ருகவே வெளியிலும் வாழ்க்கை நடத்துவோம்; அப்படித்தான் இருக்கவேண்டும் — என்பது எப்படி நீதியல்லவோ, அதைப்போல்தான் வெள்ளைக்காரர்களால் அடிமைப்படுத்தப்பட்ட நாம், வெள்ளையர்கள் வெளியேறியவுடன் தனித்தனியே வாழ்வது — அரசோச்சுவதுதான் நீதி என்கிறேம்.

நாம் நமது உரிமையைக் கேட்டால், 'பகைமை பாராட்டுகிறேம்' என்கிருர்கள். 'என் வீட்டுக்குக் காம்பவுண்டு சுவர் போடுகிறேன்' என்ருல், 'பக்கத்து வீட்டுக்காரன் திருடனு?' என்கிருர்கள்—இது எப்படி நியாயமாகும்?

இந்திய அரசியல் சட்டம் என்பது, திராவிடர்களை வடவர்கள் அடிமைப்படுத்த ஏற்பட்ட அடிமைச் சாசனம் ஆகும்.

•

**வெள்ளைக்காரன் வெளியேறி எத்தனை ஆண்டுகளாகி விட்டன? பிரெஞ்சுக்காரன் வெளியேறி எத்தனை ஆண்டு களாகிவிட்டன? என்ன மாறுதல்களை வாழ்க்கையில் கண் டோம்?**

வாழ்வு இங்கு மலர்ந்ததா என்றால், இல்லை! போதிய உணவு இந்த அரசால் இதுவரை நமக்கு அளிக்கப்பட வில்லை! மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் வசதியாகக் கிடைக்கவில்லை! ஆயிரக்கணக்கான நகரங்களிலும், கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இல்லை! இன்று மக்கள், குடிதண்ணீரை விலைகொடுத்து வாங்கும் நிலையினைக் கண்கூடாகக் காண்கிறோம்! இலட்சக்கணக்கானவர்களுக்குக் குடியிருக்க வீடில்லை! மனிதனுக்கு அடிப்படைத் தேவைகள் எனப்படுபவை, உணவு—இருப்பிடம்—தண்ணீர்! இவைகள்கூட உத் தரவாதம் செய்யப்படவில்லை இந்த அரசால்! நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது! வறுமை ஒழிந்தபாடில்லை! கல்வி எல்லோ ருக்கும் அளித்தபாடில்லை! இந்நிலை ஏன்?

அரசு நல்ல அரசு இல்லை; திறமையான அரசு இல்லை என்ற காரணத்தால் மட்டுமல்ல—நம்மவர் அர சாகவும் இல்லை என்பதுதான் மேலே சொன்ன நலிவு களுக்கு எல்லாம் காரணம் என்று நாம் சொல்கிறோம்.

பக்ரா—நங்கலைக் காட்டுகிறார்கள்; இராகுட் அணைத் திட்டத்தைக் காட்டுகிறார்கள்; தாமோதர் திட் டம், சிந்திரித் திட்டம் என்கிறார்கள்; பிலாய் என்கிறார் கள்; ரூர்கேலா என்கிறார்கள்; அத்தனையும் எங்கே— வடநாட்டில்!

இங்கே—சொந்த நாட்டான் பிறந்த நாட்டில் வாழ் ததற்கு வழிவகை இல்லாமல் கூலிகளாய் சிலோனுக் கும், பர்மாவிற்கும், சிங்கப்பூருக்கும், மலேயாவிற்கும், ஆப்பிரிக்காவிற்கும் சென்றவன், அங்கிருந்து தற்போது துரத்தி அடிக்கப்படுகிறான். 'நாடற்றவன்' என்று உதைத்துத் தள்ளப்படுகிறான்- ஏனென்று கேட்க நாதியில்லை — வாவென்று சொல்ல நமக்கு உரிமை இல்லை—வந்தாலும், இன்று வசதி அளிக்கும் அதிகாரம் டில்லியில்! ஏன் இந்த நிலை?

திராவிடம் புறக்கணிக்கப்படுவதைப் புள்ளி விவரத் தோடு நாள்தோறும் நாம் எடுத்துக் கூறிவருகிறோம். ஒப்ப மறுக்கும் ஆட்சியாளர்கள் மற்றக் கட்சிக்காரர் கள் எல்லாம் சிலபல சந்தர்ப்பங்களில் நாம் சொல்லிய வற்றைச் சொல்லி மத்திய அரசினைக் கெஞ்சிக் கேட் கிறார்கள். நிதியமைச்சர் சுப்பிரமணியம் ஆனாலும் சரி—மைசூர் முன்னாள் முதலமைச்சர் அனுமந்தையா வானாலும் சரி–இப்போதைய ஜெட்டியானாலும் சரி–ஆந் திரத்தின் சஞ்சீவியானாலும் சரி—நாம் சொல்லியவற் றைச் சிலபல சந்தர்ப்பங்களில் ஒப்புக்கொள்கிறார்கள்.

மாற்றார், உடலில் உள்ள நோயை உணருகிறார் கள். ஆனால், நாம் சொல்லும் பரிகாரத்தை உணர மறுக் கிறார்கள்—ஒப்ப மறுக்கிறார்கள்.

ஒரு நாடு விடுதலை பெற்ற நாடாக இருப்பதும், ஒரு மனிதன் சுதந்தர மனிதனாக வாழ்வதும், அதனால் ஏற் படக்கூடிய இலாபநட்டக் கணக்கல்ல—நாம் பார்க்க வேண்டியது; 'எல்லா வசதிகளையும் கொடுத்து வாழ் நாள் முழுவதும் சிறைக்கைதியாக இருப்பாயா?'— என்று ஒருவனைக்கேட்டால், கூலிக்காரனாக இருந்தா லும் சுதந்தர மனிதனாகவே இருக்க விரும்புவான் என் பது மறுக்கமுடியாததாகும்.

அதைப்போலத்தான், ஒரு நாடும் அடிமையாக இருப்பதால் இலாபமா? சுதந்தர நாடாக இருப்பதால் இலாபமா—என்பதல்ல நாம் கவனிக்கவேண்டியது. ஒரு பெண் கற்போடு இருப்பது இலாபமா? கற்பிழந்தவளாக இருந்தால் இலாபமா?—என்று யாரும் கேட்கமாட்டார் கள். ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலையில்லையோ அதுபோல ஒரு நாட்டின் சுதந்தரத்திற்கும் விலையில்லை.

நாடு புறக்கணிக்கப்படுவது தவிர்க்கப்பட்டால்— மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே போதிய பணம் திராவிடத்திற்கு ஒதுக்கப்பட்டால், திராவிடநாடு கேட்க மாட்டீர்களா?—என்பார்கள்.

ஆகவேதான், திராவிடம் தனிநாடாக—விடுதலை பெற்ற நாடாக ஆகவேண்டும் என்று நாம் சொல் கிறோம். ஒரு சிலர் நம்மைப்பார்த்துக் கேட்கிறார்கள்— 'உலகத்திலுள்ள நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து வாழ நினைக்கும் இந்த நேரத்தில், நாடு பிரியவேண்டும் என்கிறீர்களே; உலகப் போக்கினை உணரவில்லையே'— என்று. இன்று உலகத்திலுள்ள சின்னஞ்சிறு நாடு களும் விடுதலைபெற்ற நாடாகத் தனிநாடாகவே திகழ விரும்புகின்றனவே தவிர, அண்டை நாட்டோடு ஒட்டிக் கொள்ள விரும்பவில்லை. ஒரு நாடும் மற்றொரு நாடும் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களும், ஐக்கிய நாட்டு அமைப்புப் போன்றவைகள் எல்லாம் தாங்கள் பெற்ற சுதந்தரத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும், சிறிய நாடு களாயினும் பெரிய வல்லரசுகளோடு சரிநிகர் சமான மாக வாழ்வதற்குச் செய்துகொள்ளும் ஏற்பாடுகளே தவிர, வேறில்லை. ஆதலால், திராவிடம் பிரியவேண்டும் என்பது குறுகிய மனப்பான்மையுமல்ல—உலகப்போக் கிற்கு மாறுபாடானதுமல்ல.

திராவிடம் தனித்து வாழுமா — என்றார்கள்; இந் தியா தனித்து வாழ்கிறதா, உலகிலேயே பணக்கார நாடான அமெரிக்கா தனித்து வாழ்கிறதா என்றால்— இல்லை; இயலாது. அதைப்போலவேதான், பிரிந்த திரா விடம் தன் நலனுக்கு ஏற்ற வகையில் நேச நாடு

( 10-ம் பக்கம் பார்க்க )

# மரபு மறவா மாவீரருக்கு மடல்

தாயகம் அழைக்கிறது!

தன்மானம் அழைக்கிறது!

தி. மு. க. அழைக்கிறது!

திருப்பரங்குன்றம்.

வீர மரபினரே!
அழைப்பு உமக்கு!
திராவிடத் தீரரே!
உமக்கு அழைப்பு!
விடுதலை விரும்பிகளே!
உம்மை அழைக்கிறது!

## மதுரை பொது மாநாடு

வீரக்கோட்டத்தின் தீரமிகு அணிவகுப்பு!

பாரதச் சிறை உடைக்கும் வீரரின் பாசறை!

திருப்பரங்குன்றம்.

---

## திருப்பரங்குன்றம் மாநாடு கூடுவது

பதவி பங்கிட அல்ல
பட்டம் வழங்கிட அல்ல
பல்லிளித்து, பாதந்தாங்கி பராக்குக்
கூறிப் பர்மேட்பெற அல்ல

தாயகம் மீட்டிட இன்னுயிரும் தந்திடுவோர்
எத்தனை இலட்சம் என்று கணக்கெடுக்க!

---

வரலாற்றுச் சிந்துபாடிடும், வைகை அருகே ஓடுகிறது!
வாகை சூடினோர் திராவிடர் என்பதை மதுரை காட்டுகிறது!
சூளுரைப்போம் இன்பத்திராவிடம் எமது பிறப்புரிமை
இழப்போம் எதனையும் இதனைப்பெற!

திருப்பரங்குன்றம் திராவிடம் காண!

கோழைகள் விலகட்டும்!
வீரர்கள் பின்தொடரட்டும்!

கொட்டு முரசு எனக் கட்டளையிடுகிறது கழகம்
கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்
காதகரின் சூதுகளால் அழிந்திடாத கழகம்

---

புன்னகைக்குப் பலியாகாமல்,
புதிய பேய்ச்சலிடம் தேடாமல்,
கொண்ட கொள்கை மாறாமல்,
குறிக்கோளை மறவாமல், பணிபுரியும் கழகம்

தி. மு. க. கூறுகிறது
உங்கள் நாடு பாடிவீடு
வரலாறு ஓர் பொன்னேடு என்று.

கோலேந்திய மன்னர்கள்!
வேலேந்திய வீரர்கள்!
நூலேந்திய புலவோர்!
பண்பேந்திய மக்கள்!

இந்நாட்டைப் பொன்னாடு
ஆக்கினர் முன்பு.

---

கலம் செலுத்தினர்!
கவிதை பாடினர்!
அறம் கண்டனர்!
அன்பு காட்டினர்!
இன்பத் திராவிடத்தார்.

இன்றோ!
மரக்கட்டைகள்
தலையாட்டிகள்
தடுக்கி விழுவோர்
தாள்பிடிப்போர்

தென்னவர் என்று
செப்புகின்றனர்
வடவர்

இல்லை!
இல்லை!
இல்லை!

யார் மறவர்!
யார் திராவிடர்!

என்ற முழக்கம்
திக்கெட்டும்
எழுப்பிட வாரீர்!

---

திருப்பரங்குன்றம் மாநாடு
மறவரின் பாடிவீடு

குடும்பத்துடன் வருக ஜுலை, 13, 14, 15, 16.
குவலயம் அறியட்டும் கழக நிலை!

7-ம் பக்கத் தொடர்ச்சி

களோடு வியாபார ஒப்பந்தங்களோ, மற்றப் பல ஒப்பந்தங்களோ செய்துகொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவேதான், திராவிடம் பிரிந்தாகவேண்டும் என்று கூறுகிறோம். சின்னஞ்சிறு நாடுகள்— மொராக்கோ, டுனீஷியா, சைப்ரஸ், கனு போன்ற நாடுகளின் விடுதலை வரலாறுகள், விடுதலைக்காகத் தியாகத் தழும்புகளை ஏற்றுத் தங்கள் உயிரைக் கொடுக்க முன்வந்த இலட்சக்கணக்கான மக்கள்—விடுதலைப்போராட்டம் நடத்துகின்ற அல்ஜீரிய, நயாசாலாந்து, திராவிடம் போன்ற நாடுகளுக்கு நம்பிக்கையையும், ஊக்கத்தையும் ஊட்டுகின்றன.

இந்தப் பணியை — தாய்த்திருநாட்டினை மீட்கும் பணியை ஏற்க இன்று திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் தேசிய இயக்கமாக வளர்ந்துள்ளது. இதன் வரலாறு குறுகியகால வரலாறு என்றாலும், பெருமை மிக்க வரலாறு.''

•

வாய் குளிர, கேட்போர் காதுகுளிர, பெருமை மிக்க வரலாறு!—என்று பேசக் கேட்டோம். ஒருமுறை அவரை எண்ணி நன்றி கூறிக்கொள், தம்பி! இனி அந்தப் 'பெருமைமிக்க வரலாறு' எப்படி ஏற்பட்டது, என்பதை எண்ணிப்பார். இன்றுள்ள எதிர்ப்பு, புதிது மல்ல எதிர்ப்புமல்ல என்பது விளங்கும்.

வசவாளர்கள் இழிமொழி வீசினர்; பழி சுமத்தினர்; ஏளனம் செய்தனர்; எதனையும் நாம் பொருட்படுத்த வில்லை. அதனால்தான், குறுகியகால வரலாறு என்றாலும், பெருமைமிக்க வரலாறு என்று நற்சான்று அளித்தார் நண்பர்—அன்று.

அந்தப் 'பெருமைமிக்க வரலாறு' படைத்த பொறுப்பாளர்களான, நமது தோழர்கள்முன், வைக்கப்படும் பிரச்சினையாயினும் சரி, சிக்கலென்பனவாயினும் சரி, எல்லாமே, 'பழைய சரக்கு'—புதிய கண்டு பிடிப்புகள் ஏதுமில்லை. நைந்துபோனவை! வந்துவந்து போனவை! பலமுறை பாய்ந்துவந்து, சுருண்டு கீழே விழுந்தவை!—இப்படித்தான் உள்ளன இன்று கிளப்பப் படும் ஏசல், தூற்றல், எரிச்சல், யாவும்.

தூற்றல்களைப் பொறுத்தவரையிலே, அண்ணா! தரம்கெட்ட பலரும் முன்பு தூற்றிக்கொண்டுதான் உலவினர், இது ஒன்றும் புதிது அல்ல; இவர்கள் பாபம், முன்பு 'நாமாவளி' பாடியவர்கள்; அதற்காக வேனும் இவர்கள்மீது நமக்கு அனுதாபம் ஏற்படவேண்டும்; ஆனால், இப்போது தமிழ்நாடா? திராவிடநாடா? என்றல்லவா, பிரச்சினை புதிய வடிவமெடுத்திருக்கிறது —என்று கேட்கிறாய்.

தம்பி! இது பிரச்சினையுமல்ல, வடிவமுமில்லை, புதிதுமல்ல!!

ஏன் பிரச்சினை அல்ல, என்கிறேன் என்றால், விடுதலைக்குப் போரிடுவோர், விடுதலையை மறுப்போர், என்ற இரு பிரிவினருக்குள்தான், பிரச்சினை எழ முடியும்—விடுதலைக்குப் போரிடுவோருக்குள்ளாகவே பிரச்சினை எழ முடியாது—போராட்ட முறைகளில், அளவில், வகையில் கருத்து வேறுபாடுகள் எழலாம்—பிரச்சினையாகா அவை!

வடிவம் அல்ல என்று கூறுகிறேன்—தமிழ்நாடு தனிநாடாக வேண்டும் என்று கூறிக்கொண்டே, அது இந்தியப் பேரரசில் இணைந்து நிற்கும், பிரிந்து செல்லும் உரிமைபெற்று என்று பேசப்படுவதால்!

புதிது அல்ல என்று கூறிடக் காரணம், தமிழ் நாடா? திராவிடநாடா? என்று திருச்சித் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் விவாதம் நடத்தியது பல ஆண்டுகளுக்கு முன்பேயாதலால்.

எனவேதான், இது பிரச்சினையுமல்ல, வடிவமுமில்லை, புதிதுமல்ல, என்றேன்.

ஆனால், இது, விலகியோர் இதனைக் கிளப்புவதைப் பொறுத்தவரையில்தான்.

தன்னாட்சி ஆர்வம் குன்றாமல், விடுதலை வேட்கையை மறவாமல், தமிழ்நாடுதான் சாலச் சிறந்தது, திராவிடநாடு அல்ல என்று பேசுவோரும் உளர். அவர்கள் கூறுவது புதிது அல்ல—எனினும் வடிவம் தெரிகிறது, ஏனெனில் வடவர்பிடி அறவே கூடாது என்பதைத் திட்டவட்டமாகக் கூறுகின்றனர்.

அவர்கள் இதனை ஒரு பிரச்சினையாக்குவது, மாற்றாருக்குத்தான் மகிழ்ச்சி அளிக்கும், என்பதற்காகச் சில கூற விரும்புகிறேன்.

அதற்கு முன்னர், அவர்கள் அறிந்துகொள்ள, வேறொன்றும் கூறவேண்டும்—தமிழ்நாடு தமிழருக்கே என்பது இன்றைய கண்டுபிடிப்பு அல்ல—நமக்கு அது நுழைவுவாயில்! ஆம்! நமது துவக்ககட்டம்!!

தனி அரசாகத் திகழவேண்டியது, தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற பிரச்சினையை, ஒன்றின்மீது மற்றதை ஏவிவிட்டு, மோதவிட்டு, அந்தத் தாக்குதலால், இரண்டுமே வதைபட்டு வலிவு குன்றிப் போகும்நிலையை உண்டாக்கவேண்டும் என்று எண்ணிப் பயன்படுத்தும் வன்கணாளர்கள் இருக்கிறார்கள்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற பேச்சை, இரண்டுக்கும் இடையே பகையை மூட்டிவிடப் பயன்படுத்து

வோருக்கு, உள்ள நோக்கம், தனிஅரசு எனும் திட்டத்தைத் தகர்க்கவேண்டும் என்பதாகும்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்று பிரச்சினைக்கு வடிவம்கொடுத்து, எதற்கு எது விரோதம் என்று மோப்பம்பிடித்து மோதுதலை உண்டாக்க நினைப்போர் நிறைய இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

திராவிடநாடு கேட்பவர்கள் தமிழ்நாட்டுக்குத் துரோகிகள் என்றோ, தமிழ்நாடு கேட்பவர்கள் திராவிட நாட்டுக்குப் பகைவர்கள் என்றோ பேசும்படி தூண்டி விடுவது அடிப்படை பிரச்சினையை மாய்க்கமுனையும் மாபெருங் குற்றமாகும்; மாற்றாருக்கு, தெரிந்தோ தெரியாமலோ, கைக்கூலிகளாகிவிடும் கயமைப்போக்கை ஏற்படுத்திவிடும்.

அடிப்படைப் பிரச்சினை, தமிழ்நாடா? திராவிட நாடா? என்ற அளவு, முறை, வகை என்பதுதானா? அல்ல.

அடிப்படைப் பிரச்சினை இந்தியப் பேரரசு என்ற ஒன்றின் கீழ் அடிமையாக, இருக்கத்தான் வேண்டுமா? அல்லது விடுபட்டு, தனிஅரசு ஆகவேண்டுமா, என்பது தான்.

அடிப்படைப் பிரச்சினை, விடுதலை — தன்னாட்சி—தனி அரசு!

தமிழ்நாடா? திராவிடநாடா என்று பிரச்சினையைப் பேசத்தொடங்கி, இந்த அடிப்படையை, விடுதலையை, தன்னாட்சியை, தனி அரசை, மறப்பதோ, இழப்பதோ, மாபெருந்துரோகச் செயலாகும்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்று பேசும், இரு வேறு முகாம்கள், ஒன்றை ஒன்று எதிர்ப்பதற்காக அமைக்கப்படுகிறது என்று நிலைமை எழுந்தால், அது, அந்த இரு முகாம்களுக்கு அல்ல, இந்தியப் பேரரசுக்குக் கப்பங்கட்டிக்கொண்டு, கட்டியங்கூறிக்கொண்டு, காவடி எடுத்துக்கொண்டு, மற்றவர்கள் அனைவரும்; சீரிழந்து பேரிழந்து, சிற்றினமாகக் கிடக்கவேண்டும் என்று எண்ணுபவர்களின் முகாமுக்குத்தான, வாய்ப்பு; வலிவு; மகிழ்ச்சிதரும்.

தமிழ்நாடு என்று கூறுவோர் உள்ள முகாம், திராவிடநாடு என்றுரைப்போர் உள்ள முகாம், எனும் இரு முகாம்களுமே, இந்தியப் பேரரசு எதனையும் தன் காலடியில் போட்டு மிதிக்கும் நினைப்புடன், நிலையுடன், வலிவுடன் இருத்தல்வேண்டும் என்று திட்டமிட்டுக்கொட்டமடிக்கும் முகாமுக்கு எதிர்ப்பாக அமைந்தவை என்று திட்டவட்டமாக நிலைமை தெளிவுபடுத்தப்பட்டாக வேண்டும்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற பேச்சைப் பெரிதுபடுத்தி அதற்குப் பேருருவம், போருருவம் கொடுப்பதை, இந்தியப் பேரரசு புன்னகையுடன் வரவேற்கும்!

தமிழ்நாடா? திராவிடநாடா? என்று இருமுகாம்களும் போரிட்டு, மடியட்டும், நாம் கொடிகட்டி ஆண்டிடுவோம் — கொழுத்துத் திரிந்துகொண்டிருப்போம் என்று திட்டமிடும்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்று சச்சரவு ஏழட்டும், அந்தச் சச்சரவிலே இருமுகாம்களும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, நாம் நமது ஆதிக்கத்தை வலிவுள்ளதாக்கிக்கொள்ளுவோம், என்று 'ஏக இந்திய' முகாம், எண்ணி இறுமாந்துகிடக்கும்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற பிரச்சினையைக் கிளப்பிவிட்டுவிட்டு, 'ஏக இந்தியா' எனும் 'பகைமுகாம்' தன்னை நோக்கிப் பாய்ந்துவரும் எதிர்ப்பை முறியடிக்க முனையும்.

அடிப்படை பிரச்சினை, 'ஏக இந்தியா' எனும் பொறி உடைக்கப்பட்டாகவேண்டும்; இந்தியப் பேரரசு எனும் திட்டம் தகர்க்கப்பட்டாகவேண்டும் என்பது தான் என்பதை மறத்தல் ஆகாது.

இன்று, 'ஏக இந்தியா' — 'இந்தியப் பேரரசு'— எனும் ஆட்சிமுறைத் திட்டம், ஏட்டளவிலோ, பேச்சளவிலோ, விவாத அரங்கிலோ அல்ல, சட்டமாக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. அந்த 'நடைமுறை' நிலை குலையாதிருக்க, நாளும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

புன்னகையுடன் நல்லுரை கூறுவோராகச் சில வேளைகளிலும், புருவத்தை நெரித்தபடி மிரட்டும் பேச்சினராகச் சில வேளைகளிலும், ஏக இந்தியாக்கள் உள்ளனர். அவர்களின் ஒரே எண்ணம், தன்னாட்சி, தனி அரசு என்ற உரிமை உணர்ச்சி, விடுதலை வேட்கை, எழாமல், கருக்கிவிடவேண்டும் என்பதுதான்.

இந்தியப் பேரரசுக்குக் காவலர்களாக உள்ளவர்கள்; இ னத்தான் நோக்கமாகக்கொண்டு, 'தேசியம்' ம. சுகி றனர்—தேனில் குழைத்த நச்சுப்பொடி தருகின்றனர்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்று விவாதம் நடத்திக்கொண்டு அவர்கள் இருக்கட்டும்—அதுதான் நமக்கு இலாபம்—அப்படி ஒரு சச்சரவு உருவானால் தான், நம்மீது பாய, நேரமோ, நினைப்போ, வலிவோ, வாய்ப்போ, கிடைக்காதுபோகும், என்பது, 'ஏகஇந்தியா'க்களின் எண்ணம்.

அந்த எண்ணம் காரணமாகத்தான், எப்போது திராவிடநாடா? தமிழ்நாடா? என்ற பேச்சு, விவாத

மாக்கப்பட்டாலும், தூபமிட, தூக்கிவிட, ஏகஇந்தியாக்கள் துடியாய்த் துடிக்கிருர்கள்; துந்துபி முழக்குகிருர்கள்.

ஏகஇந்தியாக்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு, திராவிடநாடு, என்ற திட்டம் எந்த வகையினதாக, அளவினதாக, முறையினதாக இருப்பினும் கூடாது என்பதுதான், எண்ணம். சில வேளைகளிலே, 'தமிழ்நாடு' எனும் திட்டத்தினிடம் பரிவு காட்டுவதுபோலப் பொய்க்கோலம் காட்டுவர்; உண்மை நிலைமை, அஃதன்று.

பெயரும் வகையும் முறையும் அளவும் எதுவாக இருப்பினும், தமிழ்நாடு என்று இருப்பினும் திராவிடநாடு என்று இருப்பினும், உரிமை உணர்ச்சியாக, விடுதலை வேட்கையாக, தனிஅரசுத் திட்டமாக, இருக்கும், எதனையும். 'ஏகஇந்தியாக்கள்' எதிர்த்து ஒழிக்கத்தான், ஆதிக்கத்தால் கிடைக்கும் ஆற்றலைப் பயன்படுத்துவரேயன்றி, இரண்டில் ஏதேனும் ஒன்றை ஆதரித்து, மற்றதை எதிர்ப்பர் என்று மதியிலியும் கூறமாட்டான்.

பிரிந்துபோகிருேம் — பேரரசுக்கு எடுபிடியாக இருக்கமாட்டோம் — தனிஅரசாகிவிடப் போகிருேம், என்ற முழக்கம், எங்கிருந்து கிளம்பினுலும், தமிழ்நாடு பேசும் முகாமிலிருந்து எழும்பினுலும், திராவிடநாடு கேட்கும் பாசறையினின்று கிளம்பிடினும், ஏக இந்தியாக்களுக்கு, வெறுப்புத்தான் உண்டாகும்.

இந்தியப் பேரரசு, 'பேரரசாக' இருக்கவேண்டும் என்றுதான் எண்ணுகிறதேயன்றி, பிரிவினை, தமிழ்நாடாக இருந்தால் பரவாயில்லை, திராவிடநாடுதான் கூடாது என்று நிலையில் இல்லை; இருக்கமுடியாது.

பிரிவினை கூடாது—பேரரசு உடைபடக்கூடாது—தனிஅரசு அமையக்கூடாது — என்ற இதிலேதான், இந்தியப் பேரரசு கண்ணுங்கருத்துமாக இருக்கும்—தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற அளவுபற்றிய அக்கரை கொண்டதுபோலச் சிலருக்குத் தூபமிட்டுப் பேச வைப்பதுகூட, மொத்தத்தில், 'தனிஅரசு' கேட்கும் உரிமை உணர்ச்சியை மாய்க்கவேயன்றித், தமிழன் என்ற உணர்ச்சியை மதித்திட அல்ல.

திராவிடநாடு கூடாது நடவாது என்று, தமிழ்நாடு கேட்போர் கூறுவதாகப் பெரிதுபடுத்திப் பேசும், ஏகஇந்தியாக்களின் நோக்கம், ஏகஇந்தியா உடைபடாதிருக்கவேண்டும் என்பதுதான்.

அஃதேபோல, திராவிடநாடு எனும் திட்டத்தார், தமிழ்நாடு மட்டும் தனிநாடு ஆகவேண்டும் என்ற வாதத்திலே உள்ள குறைபாடுகளைப் பேசும்போது அக்கரை காட்டி அதனை எடுத்துரைப்பதும், 'ஏக இந்தியா' எனும் திட்டத்தைக் காப்பாற்றத்தான்.

'திராவிடநாடு' கேட்கும் குரல் வலிவடைந்து, நாட்டிலே ஆதரவு பெருகிடும் நிலை வளர்ந்ததும், ஆந்திரர் வேறு, கர்னடகர் வேறு, கேரளத்தார் வேறு, எங்ஙனம் அவர்களை இணைத்து ஆட்சி நடக்கும்; ஆகாதே! கூடாதே! ஆபத்தாயிற்றே! என்று கூச்சலைக் கிளப்பி, தனி அரசுத் திட்டத்தைத் தகர்க்க நினைக்கிருர்கள்—அதற்கு, 'தமிழ்நாடு' கேட்போர், 'திராவிடநாடு' திட்டத்துக்கு எதிர்ப்பாகக் கூறும் காரணங்களைப் பயன்படுத்திக் கொள்கிருர்கள். அதுபோலவே, தமிழ்நாடு தனிநாடு ஆதல்வேண்டும் என்ற உரிமை உணர்ச்சியை உருக்குலைக்க, திராவிடநாடு கேட்பவர்கள் பேச்சினை எடுத்துப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

இந்தியப் பேரரசினர் மேற்கொள்ளும் இந்தப் போக்குக்கு உள்ள நோக்கம், 'ஏக இந்தியா' காப்பாற்றப்படவேண்டும் என்பதாகும்.

தமிழ்நாடு தமிழருக்கே எனும் முழக்கம், எழுப்பப்பட்டபோது, எலி வளை எலிகளுக்கே என்றுதான் ஏக இந்தியாக்கள் கேலிக் குரலொலி கிளப்பின.

திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சிய முழக்கம் எழுந்தது; திராவிடம் தீராவிடம் என்று இரைச்சிலிட்டன, ஏக இந்தியாக்கள்!

இப்போது, தமிழ்நாடு கேட்போரைக்கொண்டு, திராவிடநாடு திட்டத்தைத் தாக்கவைத்து, தகர்த்திடலாம் என்பது, ஏக இந்தியாக்களின் நப்பாசை!!

திராவிடநாடு திட்டத்தைத் தாக்க, தமிழ்நாடு கேட்போருக்கு வாய்ப்புத் தேடிக்கொடுத்த பிறகு; தமிழ்நாடு தமிழருக்கே என்ற திட்டத்துக்கு வலிவு ஏறிவிட்டால், ஏக இந்தியா என்ன செய்யுமெனில், முன்பு எழுப்பிய முழக்கம் இருக்கவே இருக்கிறது, எலி வளை எலிகளுக்கே!—அதனைக் கருவியாக்கிக்கொள்ளும்.

எந்த முறையைக் கையாண்டாகிலும், யாரை யார்மீது ஏவிவிட்டாகிலும், உரிமை உணர்ச்சியை, விடுதலை வேட்கையை, தன்னுட்சி ஆர்வத்தை ஒழித்தாகவேண்டும் என்பது ஏக இந்தியாக்களின் திட்டம்.

ஏக இந்தியாக்களின் இந்தச் சதித்திட்டம் புரியும் எவரும், தனி அரசு உணர்ச்சிக்கு ஊறு தேடிடத்தக்க கேடான முறையிலே, தங்கள் போக்கையும் நோக்கையும், பேச்சையும் செயலையும் ஆக்கிக்கொள்ளமாட்டார்கள். மிகுந்த விழிப்புடனிருந்து ஏக இந்தியாக்களின் சதியை முறியடிப்பர்.

விலைக்கு வாங்கப்பட்டவர்கள் தவிர, வழுக்கி விழுந்தவர்கள் தவிர, குறுக்கு வழியில் புகழடைய நினைப்பவர் தவிர, மற்ற எவரும், ஏக இந்தியா நடத்தும் கபட நாடகத்தால், ஏமாந்து போகமாட்டார்கள், என்பது திண்ணம்.

"என்னய்யா திராவிடநாடு! தமிழ்நாடுதான் வேண்டுமென்கிருர்களே இன்னின்னர்! உன்னுடைய திராவிடநாடு கேலிக்கூத்தாமே! தமிழ்நாடுதான் சரியான திட்டமாமே!''—என்று, ஏக இந்தியாக்கள் கேட்கும்போது, நாம் நன்ருகப் புரிந்துகொள்ளவேண்டும், அந்த 'ஏக இந்தியாக்கள்' நமது நோக்கை வேறு பக்கம் திருப்பிவிட்டுத் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிருர்கள் தந்திரமாக! என்பதை.

தமிழ்நாடு கேட்பவர்களிடம், ஏக இந்தியாக்கள் சென்று, இதுபோலவே கிளறுவார்கள் — தமிழ்நாடு கூடாதாமே! திராவிடத்தார் கூறுகிருர்களே!—என்று. உடனே, தமிழ்நாடு கேட்பவர்கள், வந்தது சண்டை! இறக்கடி கூடையை!! என்ற போக்கிலே, திராவிடநாடு கேட்பவர்கள்மீது பாய்ந்தால், ஏக இந்தியாக்கள், தனியாகச் சென்று, கைகொட்டிச் சிரிப்பர்! சிண்டு முடிந்துவிட்டோம்! கண்டபடி பேசுகிருர்கள்!! — நம்பாடு இலாபந்தான்!!—என்று பேசி மகிழ்ந்துகொண்டிருக்கும்.

மாருக ஏக இந்தியாக்கள், கிளற, கிண்டிவிட, தூபமிட, தூக்கிவிட, சிண்டு முடிந்துவிட, முனையும்போது, அடிப்படையை மறவாமல், "ஐயா! ஏக இந்தியா! உம்வேலை எமக்குப் புரியும் நன்ருக! கபடநாடகம் கண்டு கருத்தழியமாட்டோம், எமக்குள்ள நோக்கம், இந்தியப் பேரரசு எனும் சூழ்ச்சிக்கோட்டையைச் சுக்கு நூருக்குவது. அந்தக் காரியத்தை நாங்கள் செய்யாமல் தடுக்க, சூது செய்கிருய்—புரிகிறது. நாங்கள் பலியாக மாட்டோம். எமது எதிர்ப்பை நிறுத்திக்கொள்ளவும் மாட்டோம், மாற்றிக்கொள்ளவும் மாட்டோம். என்று கூறிடும், துணிவும் தூய்மையும் எழவேண்டும். எழுந்திடின் 'ஏதேது! சிண்டு முடிந்துவிட முடியாதுபோலிருக்கிறதே!'' என்று உணர்ந்து, ஏக இந்தியாக்கள் மூலை செல்வர்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்பதற்கான விளக்கப் பேச்சுகள் அதிகப்பட அதிகப்பட, இந்தியப் பேரரசின் இறுமாப்பு, ஆதிக்கவெறி, சுறண்டல்முறை, இனம் அழிக்கும் கொடுமை, என்பவை குறித்த பேச்சுக்குறையும், மறையும். அந்தப் பேச்சுக் குறையக் குறைய, உரிமை உணர்ச்சி உருக்குலையும், தனி அரசுத் திட்டம் துருப்பிடித்துப்போகும், விடுதலை அணி உடைபடும்; சிதறுண்டுபோகும்.

நாம், தம்பி! ஒருதுளியும் இந்த நிலைமை எழ இடமளிக்கக்கூடாது.

வடக்கு வேறு—தெற்கு வேறு—என்ற விளக்கம், இப்போது நல்ல முறையிலே, கிடைத்து, மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

வடக்கு நரகலோகமுமல்ல — வடக்கே உள்ளவர்கள் யமகிங்கரருமல்ல என்ற புதிய சித்தாந்தம் மக்கள் காதுக்கு நாராசமாக இருக்கிறது.

எனக்குள்ள மகிழ்ச்சி, தமிழ்நாடு தனிநாடு ஆக வேண்டும் என்று கூறும் ஆதித்தனர், இப்படிப்பட்ட ஒரு ஆபாசமான சித்தாந்தத்தை ஏற்கவில்லை என்பது தான்.

வடவரின் பிடியை எதிர்ப்பதில், இந்தியப் பேரரசு கூடாது என்பதில், ஆதித்தனர், தீவிரம் காட்டுவதை வரவேற்கிறேன்—மகிழ்கிறேன்—வடநாடு நரகலோகமுமல்ல, வடவர் யமகிங்கரருமல்ல என்று அவர் கூறவில்லை. அவருக்கு இல்லை அந்தக் கெடுமதி! அவர் அந்த நிலைமைக்குத் தாழ்ந்துபோகவில்லை. தலைநிமிர்ந்து நின்று, தமிழ்நாடு தமிழருக்கு என்ருர்! அதுகேட்டு நான் இன்புறுகிறேன்.

இந்தியப் பேரரசு என்பது அரசியல் ஆதிக்கத்தால் இறுமாந்துகிடக்கும் ஒரு புதிய ஏகாதிபத்தியம்; வடநாட்டு முதலாளிகளுக்கு அமைந்துள்ள கோட்டை; தென்னுட்டைத் தேயவைக்கும் சுறண்டல் யந்திரம், என்ற பேருண்மையை இப்போது மக்கள், மிகத் தெளிவாகத் தெரிந்துகொண்டுவிட்டனர்.

இந்த உணர்ச்சி பாழாகும்படியான, பேச்சிலே ஈடுபடுபவர்களைவிட நாட்டுக்குக் கேடு செய்பவர்கள் வேறு எவரும் இருக்கமுடியாது.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற பேச்சுக்குப் பின்னலே பதுங்கிக்கொண்டு, தென்னுட்டைச் சுறண்டிக் கொழுக்கும் வடநாட்டு முதலாளிகளின் கோட்டையாகிவிட்ட இந்தியப் பேரரசு எனும் புதிய ஏகாதிபத்தியத்துக்கு உடந்தையாக இருப்பவர் எவரேனும், அவரினும் இழிதன்மையான செயல் புரிவோர் வேறெவரும் இருக்கமுடியாது.

தம்பி! என்னைப்பற்றி, என் திறமைக்குறைவு, தெளிவற்ற தன்மை, பெருந்தலைவர்களிடம் பேசமுடியாத பயங்கொள்ளித்தனம், என்ற எதைப்பற்றி வேண்டுமானுலும் பேசி மகிழட்டும்; மகிழக்கூடியவர்களுக்கு விருந்தளிக்கட்டும். நான் துளிகூட வருத்தப்படவில்லை. ஆனுல், அதே வேகத்துடன் விறுவிறுப்புடன் நம்மை அடிமைப்படுத்தி, அலைக்கழிக்கும், 'ஏக இந்தியா' எனும் ஏற்பாட்டை, எதிர்த்துத் தாக்கினுல் போதும்.

அண்ணன் என்பவன் யாரடா!
அப்படி ஒருவனெனக்கேனடா!

என்று வீரச்சிந்து கேட்போரைப் பரவசப்படுத்தும் அளவுக்குப் பாடட்டும். ஆனுல், வடநாட்டு ஆதிக்கத்

தால் வதைபடும் மக்களை விடுவிக்க, வீரம் கொந்தளிக்கும் வெண்பாக்கள் பாடுவதை, விட்டுவிடவேண்டாமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன். நான் ஒருதனி ஆள் — மிகச்சாதாரணமானவன் — என்னை அடக்க, அல்லது அழிக்க, இத்தனை பெரிய முயற்சியும், ஆற்றலும் தேவையா!! அந்த ஆற்றலை, நமது மக்களை, சிங்களத்துக்கும், சிங்கப்பூருக்கும், ஜான்சிபாருக்கும் மோரிசுக்கும், நெட்டாலுக்கும் துரத்திவிட்டிருக்கிற இந்தியப் பேரரசின் — ஆதிக்கத்தை எதிர்த்திடப் பயன்படுத்த வேண்டும். வெண்ணெய்வெட்ட வாள் ஏன்? என்னைத் தாக்கவா இவர்களின் அறிவாற்றல் தேவைப்பட வேண்டும்!

ஐயம் ஏற்படும், நாட்டுமக்களுக்கு. இவர்களுக்கு உள்ள ஆற்றல் இந்த அண்ணாத்துரையை ஏசமட்டுமே பயன்படும் அளவு போலும் என்று!!

அதுமட்டுமல்ல! அவனோடு இருந்தபோது வடநாட்டு ஏகாதிபத்யத்தைத் தாக்க, நேருவிலிருந்து நேருதாசர் வரையிலே, ஏ! மாமிச மலைகளே! சோற்றாலடித்த பிண்டங்களே! உணர்ச்சியற்ற உருவாரங்களே! என்றெல்லாம் கண்டித்தார்கள், இடிமுழக்கமிட்டு. இப்போது ஒரு வார்த்தை கூறப் பயப்படுகிறார்களே! அந்த இடத்தைவிட்டு வந்துவிட்டதும் இத்தனை தொடை நடுக்கமா!—என்று ஏளனமாக எண்ணுவர்.

அதுமட்டுமல்லவே! வடநாட்டு ஏகாதிபத்தியத்தை மகிழச்செய்வதற்காகவே, இப்போது, தி. மு. கழகத்தவரைத் தூற்றிக்கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது என்று எண்ணுவார்கள். அந்த ஐயம் அகற்றவும், ஆற்றலைத் தக்க வழியில் பயன்படுத்தவும், வீரவெண்பா பாடிவர வேண்டுகிறேன். இடையிடையே என்னை இகழ்ந்து விருத்தம் பாடிக்கொள்ளட்டும் — வேண்டாமென்று சொல்ல நான் யார் — மேட்டுக்குடியினனா? ஒட்டா? உறவா? உம்! ஆகட்டும், என்னை ஏசி, அகவல் அந்தாதி, எதெது முடிகிறதோ அவ்வளவும். ஆனால், அந்தப் பழைய போர்க்குரல்—முழக்கம்—கண்டதுண்டமாக்கிடும் வீராவேசம் — அந்தப் பக்கம் கொஞ்சம் பாயட்டும்: வடநாட்டு ஏகாதிபத்யத்தின்மீது வெகுண்டு பாடிய வெண்பாக்களை, நாடு கேட்கட்டும்.

என் காதுகளிலே இன்னும் ஒலித்தபடிதான் இருக்கின்றன, அந்த வெண்பாக்கள்.

**தெற்கு வரண்டதேன்? தீக்காடாய்ப் போனதேன்?**
**குற்றுயிராய் வாழ்வு குலைந்ததேன்? பொற்றொடியே!**
**அஞ்சாமல் கூறிடுவேன் அத்தனைக்குங் காரணந்தான்**
**வஞ்சனையாளர் வடக்கு.**

**தென்னாட்டின் செல்வமெலாஞ் சேர்த்து டில்லியில் குவித்தே**
**அந்நாட்டைப் பூக்காடாய் ஆக்குவதும் இந்நாட்டில்**
**மிஞ்சும் தொழில்களையும் வேரறுத்து மாய்ப்பதுவும்**
**வஞ்சனையாளர் வடக்கு.**

*

**துன்பநிலை நீங்காத் தூயோர் புகழ்கின்ற**
**'இன்பத்திராவிடம்' இங்கமைந்தால்—தென்னவர்பால்**
**தஞ்சமடைவதல்லால் தன்னாட்சி காணுமோ**
**வஞ்சனையாளர் வடக்கு.**

*

**நெஞ்சுடையப் பாடுபட்ட நீர்மையார் தென்னாட்டில்**
**பஞ்சடைந்த கண்ணாய்ப் பரிதவிக்க—அஞ்சாமல்**
**மிஞ்சிய செல்வத்தை மேவிச் செழிக்குதடா**
**வஞ்சனையாளர் வடக்கு.**

*

**நாடாண்ட தென்னவர்கள் நாதியற்று வாழ்விழந்து**
**ஓடாகி நாளும் உழைத்தாலும்—வாடாமல்**
**நெஞ்சில் இரக்கமின்றி நித்தம் வதைக்கின்றார்!**
**வஞ்சனையாளர் வடக்கு.**

*

இத்தகைய விடுதலை உணர்ச்சி கொப்பளிக்கும் வெண்பாக்கள், வீர முழக்கங்கள், யாவுமே மாறி, இப்போது ஏன் விலகினோம் என்பதற்கான 'நொண்டிச் சிந்தும்'—வடக்குக்கு 'காவடிச் சிந்தும்', நேரு பெருமகனாருக்குத் 'திருப்புகழ்' பாடுவதுமாகவா, இவர்கள் மாறிவிடவேண்டும். இதைக் காணும்போது,

**வஞ்சனையாளர் வடக்கு என்ற வாயினரே!**
**வாஞ்சனையும் கொண்டீரோ வடவர் பாலே!**
**கிடக்கின்றான் காஞ்சியிலே கிழடு தட்டி!**
**கிளர்ந்தெழுந்து காட்டிடுவீர் உமதுவீரம் வடக்கு நோக்கி!**

என்றல்லவா, தம்பி! கேட்டிடத்தோன்றும்.

வெண்பாவா இது! என்று கவிதை கற்றோர் கேட்கக்கூடும். தம்பி! எனக்கு அந்த இலக்கணம் தெரியாது, ஆனால் இதுதான் இவர்தம் போக்குகண்டு, பேச்சு கேட்டு, நாடு தந்திடும் புதுப் பா!

அண்ணன்,

அண்ணாதுரை

# தீயும் தென்றலும்

டி.கே.சீனிவாசன்.

எதிரிலே அழுதுகொண்டு நின்ற விமலாவையே பார்த்தாள் பத்மா. தாண்டிப்போய்விடலாம் என்று தாவும்போது தடுக்கிவிழ நேர்ந்தால்......எதிர்காலம் எரிந்து பொசுங்குவதை நேரிலேயே பார்த்துக்கொண்டு நிற்பவள்போலத் தோன்றியது அவள் தோற்றம். கலம் சிதறிக் கடலில் விழுந்தவன், கஷ்டப்பட்டுக் கரையை நெருங்கும்போது, எதிரே ஒரு சுறுமீன் துரத்தி வருதல் கண்டால்.........அத்தனை உணர்ச்சிகளும் விமலாவின் முகத்தில் ஒட்டப்பட்டிருந்தன.

வெளியே பலமான பலவிதக் கூச்சல்கள் கேட்டன. வெட்டு, குத்து, அடி, உதை என்ற பயங்கரமான சொற்கள் அளவுக்குமீறியே பயன்படுத்தப்பட்டன. உடனே விமலா கதவருகே ஓடிப்போய், தாள் சரியாகப் பொருந்தியிருக்கிறதா என்று ஒருமுறை பார்த்துக்கொண்டாள்.

கண்ணன் நினைவு வந்தது பத்மாவுக்கு. எவ்வளவு கல்நெஞ்சனுக இருந்திருந்தால் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்திருப்பான் என்று எண்ணினுள். எவனையாவது திருமணம் செய்துகொள்ளும்படி விமலாவுக்கு அனுமதி தந்தவனுக்குத் தீடீரென இப்படிப்பட்ட எண்ணம் எப்படி ஏற்பட்டது என்பதுதான் அவளுக்குப் புரியவில்லை.

"நீ கண்ணனுக்கு அழைப்பு அனுப்பினுயா, விமலா?" என்றுள்.

"அனுப்பினேன், பத்மா. எதிர்பார்ப்பேன் என்று நான் அதில் எழுதி அனுப்பினேன்" என்றுள் விமலா.

"அப்படியானல்..." அதற்குமேல் பேசச் சொற்கள் தெரிந்தன; விஷயம் இல்லாமல்போயிற்று.

தன்னை ஒரு நாள் கண்ணன் சந்தித்தது அவள் நினைவுக்குவந்தது. அப்போது அவன் கேட்ட கேள்வி...

"ஏன், விமலா! போலீசுக்குப் புகார் செய்தது நீதானு?" என்று சேட்டாள் பத்மா.

"ஆமாம், பத்மா. ஆனுல் அது அவனுக்குத் தெரியாதே!" என்றுள் விமலா.

காரணத்தைப் புரிந்துகொண்டாள் பத்மா. பழிதீர்த்துக்கொண்டிருக்கிறுன்.

"அது அவனுக்குத் தெரியும், விமலா, நான் புகார்செய்ததாக நினைத்துக்கொண்டு ஒரு நாள் என்னைக் கேட்டான். 'இல்லை' என்றேன் நான். நானுக இல்லாவிட்டால் நீயாகத்தானே இருக்கவேண்டும். அந்த யூகத்தில்தான் இதைச் செய்திருக்கிறுன்."

"அப்படியானுல் வஞ்சந்தீர்த்துக்கொள்ளவா இதைச் செய்திருப்பான்?" என்று கேட்டாள் விமலா.

"ஆமாம், விமலா. பழி வாங்குவதற்குப் போதுமான அறிவும் ஆற்றலும் பெண்ணிடந்தான் உண்டு. ஆனுல், அதற்கான வாய்ப்புகள் ஆணுக்குத்தான் அதிகமாக அளிக்கப்பட்டிருக்கின்றன. மூச்சு விடுவதிலிருந்து முகஞ் சுளிப்பதுவரை எதை வேண்டுமானும் அவன் பயன்படுத்திக்கொள்ளலாம். உனக்கு அவன் கடிதம் எழுதியிருந்தால், அதைக்கொண்டு நீ அவன் திருமணத்தை நிறுத்திவிட முடியாது. நீ அவனுக்கு எழுதினுய்; அதனுல்தான் இப்படி நடந்திருக்கிறது."

"இதற்கு என்ன செய்யலாம், பத்மா?" என்று கேட்டாள் விமலா.

எப்படியாவது இந்தத் திருமணம் நடந்தாகவேண்டுமே என்ற கவலை அவள் குரலில் காணப்பட்டது. அவசரப்பட்டு அவளே ஒரு கயிற்றை எடுத்துக் கழுத்தில் கட்டிக்கொண்டு வந்திருந்த மணமகனேடு போய்விடுவாள் போலிருந்தது.

வெளியில் அரவம் ஏதுமில்லை. இருள் கவிந்து நெடுநேரம் ஆகியிருந்தது. அந்த வீட்டிலிருந்தவர்கள் உணவருந்தினுர்களா இல்லையா என்பதுகூடத் தெரியவில்லை. அங்கே யாராவது இருக்கிறுர்களா, அல்லது எல்லோருமே ஓடிவிட்டார்களா என்பதுகூடப் புரியவில்லை. ஒரு மணமகளுக்குக் கிடைக்க வேண்டிய மதிப்பு, மரியாதை ஒன்றைக்கூடக் காணும். இருந்தும் இல்லாதவளைப்போலக் கருதப்பட்டவளாகிவிட்டாள் விமலா. கதவைத் திறந்து வெளியே பார்க்க இருதோழிகளுக்குமே அச்சமாக இருந்தது.

"எனக்கொன்று தோன்றுகிறது, விமலா" என்றுள் பத்மா.

"என்ன?" என்று ஆவலாகக் கேட்டாள் விமலா.

"ஆனுல்.........அதை நம்மால் செய்யமுடியுமா?

"எதாக இருந்தாலும் செய்துதான் ஆகவேண்டும், பத்மா. எப்படியும் இந்தத் திருமணம் நடந்தே ஆகவேண்டும். காலையில் ஒரு முழக் கயிறு என் கழுத்தை அணைத்துக்கொண்டில்லாவிட்டால், மாலையில் ஒரு கெஜக்கயிறு என் கழுத்தை நெரித்துக்கொண்டிருக்கும்."

"விமலா..........."

அழைத்தவளும் அழைக்கப்பட்டவளும் அழுதுகொண்டிருந்தார்கள்.

"மணவறை அமைக்கப்பட்ட பிறகு அது பயன்படாமல் கலைக்கப்படக்கூடாது, பத்மா. அப்படிக் கலைக்கப்பட்டால் அந்தப் பெண்ணுடைய வாழ்வு குலைக்கப்பட்டது என்பதுதான் அதன் பொருள்."

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 / இல்லம் :..118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

ஆறுதல் சொல்லவேண்டிய தானும் அழுதுகொண்டிருப்பது பத்மாவுக்கு என்னவோ போலிருந்தது.

"அப்படியானல், விமலா, நீ புகார் செய்யவில்லை என்பதை கண்ணனிடம் நேரில் தெரிவிக்கவேண்டும். இது முடியுமா?"

விமலா சிறிது நேரம் சிந்தித்தாள். பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவள் போல,

"வா, பத்மா! கண்ணன் வீடுவரை எனக்குத் துணையாக வா. நான் தெரிவித்துவிட்டு வருகிறேன்" என்ருள்.

"வீட்டில் எல்லோரும் இருக்கிருர்களே, எப்படி வெளியே போவது, விமலா"

"கொல்லைப்புறமாகப் போய்விடலாம்"

இரண்டு சேலைகளை எடுத்துச் சன்னல் வழியாகக் கொல்லையை நோக்கி வீசி எறிந்தாள் விமலா. கதவைத் திறந்தாள். தன் தோழியின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு நடந்தாள்.

வீட்டில் எல்லோருமே அரைத் தூக்கத்தில் இருந்தார்கள். உட்கார்ந்துகொண்டு தூங்கியவர்களும், படுக்கையில் புரண்டுகொண்டிருந்தவர்களுமாகவே காணப்பட்டது. வெளிக் கதவு தாளிடப்படவில்லை. வெளியே பந்தலில் யாரோ பேசிக்கொண்டிருந்ததுமட்டும் கேட்டது. கொல்லைப்புறத்தில் கிடந்த இரு சேலைகளையும் எடுத்து தம்மை நன்கு மூடிக்கொண்டு இரு தோழிகளும் நடந்தனர்.

( தொடரும் )

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஓநாயைத் துரத்திச் சென்ற வேட்டை நாய்களைப்போல் ஓடியவர்களைத் துரத்திச் சென்றவர்கள் சற்று நேரத்தில் திரும்பி வந்தார்கள் வெற்றியில்லாமல்; — களைப்பையும், நெட்டுயிர்ப்பையும் சுமக்கமுடியாமல் சுமந்துகொண்டு.

அந்த ஜீப்பில் வந்த குழுவினர் போலீஸ் குழுவினர். அதன் தலைவன் சிங்காரத்தை நெருங்கினன். இன்னும் சிங்காரம் தன் குதிரை வண்டியில் உட்கார்ந்தது உட்கார்ந்தபடியே இருந்தான்.

"இறங்கடா கீழே!"

அதட்டினன் போலீஸ் தலைவன்.

சிங்காரம் கீழே குதித்து இறங்கினன்.

"யாரடா அவர்கள்? எங்கு போகிறீர்கள்? எங்கிருந்து வருகிறீர்கள்?"

சிங்காரத்திற்கு என்ன தெரியும்? அவன் அப்படியே நின்ருன் அடித்து வைத்த சிலைபோல் கைகட்டிக்கொண்டு.

"உம், சொல் என்ருல், சொல்லமாட்டே?" பளீர், பளீர் என்று சிங்காரத்தின் முகத்தில் இரண்டு அறைகள் விட்டான் போலீஸ் தலைவன்.

சிங்காரம் அலறினன். அவன் எழுப்பிய அலறல் திரும்பவும் அந்தக் காட்டில் சிலையோடிற்று. அவன் அடியுண்ணுவதைக் கண்டு, வண்டியிற் பூட்டப்பட்டிருந்த அவன் குதிரை இப்படியும், அப்படியுப் ஆடி அலைக்கழிந்து அலமந்தது.

போலீஸ் தலைவனுக்கு ஆத்திரம். தங்கள் அத்தனைபேர் கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு எங்கோ ஓடிப் பதுங்கிக்கொண்டுவிட்டார்களே வண்டியில் வந்த இருவரும் என்ற ஆத்திரம்.

"உம், கிளம்பு ஸ்டேஷனுக்கு!"

திரும்பவும் உறுமினன் போலீஸ் தலைவன்.

அதற்குள் அந்த வண்டியைச் சோதனை போட்ட இருவர், வண்டியில் வந்த இருவரும் அவசரத்தால், எதிர்பாராத தடுமாற்றத்தால் முடியாமைக்குள்ளாகி விட்டுச் சென்றுவிட்ட கனமான பையைக் கைப்பற்றினர்கள். 'பைக்குள் இருப்பதென்ன?' தலைவன் கண்ணெதிரே பாட்டரி விளக்கைப் போட்டுக்கொண்டு பிரித்துச் சோதனையிட்டார்கள்.

பைக்குள் அவர்கள் எதிர்பார்த்தன கிடைத்தன. அரைகுறையாக முடிக்கப்பட்டிருந்த சில கள்ள நோட்டுக்கள், அவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் கருவிகள் சில அந்தப் பைக்குள் அடங்கியிருந்தன.

"யாரடா அவர்கள்? எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கு போய்க்கொண்டிருக்கிறீர்கள்? சொல்லடா, சொல்!"

திரும்பவும் சிங்காரத்தின் முகத்தில் இரண்டு அறைகள் வீழ்ந்தன. இந்தத் தடவை அவன் மூக்கிலிருந்து குருதி வழிந்தது. அவன் திரும்பவும் அலறினன். அவன் குதிரை மறுபடியும் ஒருதடவை வண்டியை ஆட்டி அலைக்கழித்துவிட்டு நின்றது.

"இவனையும் சோதனை போடுங்கள்!" என்று போலீஸ் தலைவன் உத்தரவிட்டான்.

அவனிடம் என்ன இருக்கிறது சோதனைபோடுவதற்கு? ஒருவர் மாற்றி ஒருவராக இருவர் அவன் மடியையும், சட்டைப்பையையும் சோதனை போட்டார்கள். மடியில் இரண்டு வெற்றிலைச் சருகுகள், கொஞ்சம் சுண்ணும்பு — காய்ந்து போனது — இருந்தன. சட்டைப் பையில் இரண்டு, மூன்று துண்டு பீடிகள் கிடந்தன. அவற்ருேடு அந்த ஐந்துரூபாய்த்தாளும் கிடைத்தது—அவனைக் கனவுலகுக்கு அழைத்துச் சென்ற அந்த ஐந்து ரூபாய்த் தாள்.

சோதனையிட்டு, நோட்டைக் கைப்பற்றியவன் தலைவனிடம் நீட்டினன், அதை அவன் ஜீப்பின் தலைவிளக்கைப் போட்டுக்கொண்டு திரும்பத் திரும்பப், புரட்டிப் புரட்டி அதனை உற்று நோக்கினன், ஐயமே இல்லை. அதுவும் கள்ளநோட்டுத்தான்.

திரும்பவும் வந்த வழியே எல்லாரும் கிளம்பினர்கள்.

"டக்டக் டகடக், டக்டக் டகடக்" சிங்காரத்தின் வண்டி ஓடிக்கொண்டிருந்தது. ஆனல், அவன் அதை ஓட்டவில்லை. அவன் போலீஸ் தலைவனேடு ஜீப்பில் வந்துகொண்டிருந்தான்.

வழியில், கடைத்தெருவில் டிக்கடைக்காரன் சிங்காரம் கொடுக்க வேண்டிய நாலணவைக் கேட்கவில்லை. மளிகைக் கடைக்காரன் வழிமறித்துக்கொண்டு 'அரிசி வாங்கிய பணத்தைக் கொடு' என்று நிற்கவில்லை. அந்தப் பழைய கடன்காரன் — கடன்கொடுத்தவன் — 'பணத்தைக் கொடுத்துவிட்டுப் போ'வென்று கூவி யழைக்கவில்லை.

எல்லாரையும் சிங்காரம் ஏறிட்டுப்பார்க்க முடியாமல் பார்த்துக்கொண்டே ஜீப்பில் சென்ருன். எல்லாரும் சிங்காரத்தை வியப்போடு—திகைப்பில்லாமல் வேடிக்கை பார்த்தார்கள். யாரும் அவன்மீது இரங்கல் நோக்கைப் படியவிடவில்லை. யாரும் அவனைச் சுட்டெரிப்பார் போல் வெறித்துப் பார்க்கவுமில்லை.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.